தாக்குதல் நடந்த நவம்பர் 11ஆம் திகதி பூநகரியிலிருந்த படையினரின் விபரங்கள் அவர்களது பெற்றோர்களுக்கு இன்று முதல் கட்டம் கட்டமாக அறிவிக்கப்படும் இன்று முதல் அடுத்த 48 மணி நேரத்தினுள் பூநகரியில் சேவையிலிருந்த படையினரின் விபரங்கள் இராணுவ - கடற்படை தலைமை அலுவலகங்கள் மூலம் பெற்றோர்களுக்கும் உறவினர்களுக்கும் கடிதம் மூலம் அறிவிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பூநகரி தளம் புலிகளினால் அழிக்கப்பட்டபோது பல நூற்றுக்கணக்கான படையினர் பலியானதைத் தொடர்து படையினரின் உறவினர்கள் தமது பிள்ளைகளின் நிலையறிய பாதுகாப்பு அதிகாரிகளை வற்புறுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

# பூநகரி முகாமை பலப்படுத்த புதிதாக 2000 சிப்பாய்கள்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

பூநகரி முகாம் பகுதிக்கு 2000 சிப்பாய்கள் புதிதாக கொண்டுவரப்பட்டு முகாம் பலப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் நளின் அங்கமன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்: பூநகரி இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கிய போது அருகிலிருந்த காட்டினுள் வழிதவறிய ஆறு சிப்பாய்களை பூநகரிக்கு அனுப்பப்பட்ட மேலதிக படையினர் காப்பாற்றியுள்ளதாக கூறியுள்ளார்.

இதேவேளை வடக்கிலுள்ள இராணுவ நிலையங்கள் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அடுத்த சில நாட்களினுள் வடக்கில் உள்ள நிலைமையை பரிசீலனை செய்ய ஒவ்வொரு இராணுவ நிலையத்திற்கும் சிரேஷ்ட அதிகாரிகள் விஜயம் செய்யவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனிடையே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க காயமடைந்த படையினரை நேற்று ஆஸ்பத்திரிகளுக்கு விஜயம் செய்து நேரில் அவதானித்தார்.

# எதிர்க்கட்சித் தலைவிக்கு இப்படியும் ஒரு கற்பனை

(கொழும்பு)

''டென்சில் கொப்பேக்கடுவ இன்று உயிருடன் இருந்திருந்தால் பூநகரி இராணுவ கடற்படை கூட்டு முகாம் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்திருக்காது'' இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டார நாயக்கா தெரிவித்துள்ளார்,

கல்கிசையில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய அவர் தொடர்ந்து பேசுகையில்; விடுதலைப் புலிகளுடன் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் யுத்தத்தில் எமது சிங்களச் சகோதரர்கள் அநியாயமாக பலியாகி வருகிறனர்.

சிங்கள இளைஞர்களுக்கு போதிய இராணுவப் பயிற்சி வழங்காமல் துப்பாக்கியே தூக்கத் தெரியாதவர்களுக்கெல்லாம் ஐந்து நாள் பயிற்சி மட்டும் வழங்கிவிட்டு அரசு அவர்களை யுத்த முனைக்கு அனுப்புகிறது. இதனால் சிங்கள இளைஞர்கள் அநியாயமாகக் கொல்லப்படுகின்றனர். என்றும் இவ்வாறான அரசின் நடவடிக்கைகளால்தான் பூநகரி இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்தது என்றும் கூறினார்.

இந்திய அமைதிகாக்கும் படையை வலுக்கட்டாயமாக திருப்பி அனுப்பாமல் அவர்கள் இங்கேயே இருந்திருந்தால் பூநகரி முகாமை புலிகளிடம் விழாமல் பாதுகாத்துக் கொள்வதுடன் சிங்கள இளைஞர்களும் அநியாயமாகக் கொல்லப்படமாட்டார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# 10 ஆண்டுகளில் புலிகளின் வளர்ச்சி அதீதமானது

## பசீர்தேவு தாவுத் தெரிவிப்பு

[கொழும்பு]

வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு இப்போது மிகவும் முக்கியமானது என்பதை யாவரும் உணர வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பசீர்தேவு தாவுத் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் பத்து ஆண்டுக்கு முன்னர் இருந்ததை விட மிகவும் கூர்மையடைந்துள்ளது. இது எவ்வளவு தூரம் இருக்கிறது என்பதை நாம் உணர வேண்டும். ஆரம்பத்தில் சிறிய தாக்குதல்களை நடத்திய விடுதலைப் புலிகள் தற்போது பூநகரி போன்ற முன்னணி முகாமினை தாக்கும்அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளனர்.

இதிலிருந்து தெரியவருவது என்னவென்றால் ஈழம் அரசு ஒன்றை உருவாக்குவதற்கு தேவையான ஆயுதங்கள் மேற்கொள்ளப்படுகிறது என்பதாகும். எனவே இந்த நிலையில் இருந்து நாம்மீள வேண்டுமாயின் அரசியல்தீர்வு மிகவும் அவசியமானது என்பதை உணர வேண்டும் என்றார்.

இப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நோக்கத்திற்காக சபாநாயகர் எம் எச். முகமட் யாழ்ப்பாணம் செல்வதற்கு ஆலோசனை செய்துள்ளார். உண்மையில் அதுநடைமுறைப்படுத்தப்படுமானால் இது தொடர்பாக முகமட் அரசாங்கம் சார்பாக கொண்டு செல்லும் முடிவுகள் மக்களுக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்கள் பெறப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி குண்டுவீச்சில

# காயமடைந்த மூவர் வவுனியா ஆஸ்பத்திரியில்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் கிளிநொச்சி வைத்தியசாலை சுப்பர் சொனிக் விமானத்தாக்குதலுக்கு இலக்கான போது காயமடைந்த பொதுமக்கள் வவுனியாவிற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர் ஆபத்தான நிலையில் இருந்த மூவரே நேற்றுக் காலை செஞ்சிலுவைச் சங்கத்தினரால வவுனியா கொண்டு செல்லப்பட்டனர்.

குண்டுவீச்சின்போது கடமையிலிருந்த பிரதம மருத்துவ தாதி ஊழியர், குழந்தை பிரசவித்திருந்த தாய் ஒருவருமே வவுனியா எடுத்துச் செல்லப்பட்டனர்

இதேவேளை கிளிநொச்சி வைத்தியசாலை சேதங்கள் செஞ்சிலுவை சங்கத்தினரால் படம் பிடிக்கப்பட்டது இவை கொழும்பு தலைமையகத்திற்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

---

பிரபாகரன்

பத்திய மாகாண அரசுகளின் அதிகாரங்கள் எவை எவை என வரையறை செய்யப்பட வேண்டும். பாதுகாப்பு நிலை சீரடைந்ததும் கிழக்கில உள்ளூர் தேர்தல் நடத்தலாம் என்பவையே அந்த விதப்புரைகளாகும்.

இறுதி அறிக்கையில் பெரும்பான்மை சிங்களக் கட்சித் தலைவர்கள் ஒப்பமிட்டுள்ளனர் தமிழ் முஸ்லிம் அரசியல் வாதிகள் தெரிவுக் குழுவிருந்து ஏற்கனவே வெளியேறி விட்டிருந்தனர். இருவருடங்களின் பின் தெரிவுக்குழுவின் இறுதி அறிக்கை வந்த கடந்த வாரம் பூநகரியில் புலிகள் நடத்திய தாக்குதலே அனைவரது கவனத்தையும் ஈர்த்திருந்து என பேலும் குறிப்பிடுள்ளார்.

---

முள்ளியவளை

அப்பகுதி நோயாளிகள் முள்ளியவளைவைத்தியசாலையை பயன்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

---

பூநகரி

யினர் காயமடைந்ததாகவும் எனினும் மணல் தடுப்பினால் முகாம் சேதமாகவில்லை எனவும் அதிகாரிகள் கூறியதாக அது மேலும் தெரிவித்தது.

---

வெகுஜன

வனங்கள் ஆகியவை இணைந்து இச்சண்டன இயக்கத்தை நடாத்தவிருப்பதாகவும் தெரியவருகிறது இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (க), (நி)

---

அஞ்சலி

நோககி சிறிலங்கா விமானப் படை விமானங்கள் ரொக்கட் மோட்டர் தாக்குதல் நடத்தியுள்ளன.

நேற்று முன்தினம் மாலை 3-20 ணியளவில் இப் பகுதிக்குவந்த இரு புக்காரா விமானங்கள், இரு பொம்மர்கள், ஒரு ெலிக்கொப்டர் ஆகியவையே ரொக்கட்மோட்டர் தாக்குதலை மேற்கொண்டன.

ஆயினும் விடுதலைப்புலிகள் இவ் விமானங்களை நோக்கி 50 கலிபர் தாக்குதல் நடத்தி அவற்றைக் கலைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டனர். மேற்படி மோட்டார் தாக்குதலின் சேத விபரங்கள் தெரியவரவில்லை.

இச் சம்பவத்தினால் அப் பகுதி பரபரப்படைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

---

தமிழீழ

எழுச்சியூட்டும் வகையிலும் மாவீரர் நாள் நிகழ்வைப் பறைசாற்றுவதுமான வாசகங்களைத் தாங்கிய பல பதாகைகள் கட்டப்பட்டுள்ளன.

யாழ் பிரதான பஸ்நிலையத்தின் முன்றலில் இவ்வாறான பல்வேறு வகையான பதாகைகளைக் காணக்கூடியதாக உள்ளது.

மாவீரர் நாளுக்கான இவ்வாறான எழுச்சிமிகு ஏற்பாடுகளைக் கவனிப்பதில் பல்வேறு பொது மக்கள் அமைப்புக்களும் மக்களும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

# கிறிஸ்தவர்களுக்கு எதிராக தேரோக்கள் போர்க்கொடி

(கொழும்பு)

சிறிலங்காவில கிறிஸ்தவர்களுக்கும் பௌத்தர்களுக்கும் இடையில் கெடுபிடி வளர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது தமிழர் இனப்பிரச்சினையில் உள்ளூர் மற்றும் சர்வதேசக் கவனம் திரும்பியிருக்கும் இந்தவேளையில், சிறுபான்மையினரான கிறிஸ்தவர்களுக்கு எதிரான கெடுபிடிகள் ஆரம்பித்திருப்பதாக பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது.

கிறிஸ்தவ சமயத்துக்கு மக்கள் அதிக அளவில் மதமாற்றம் செய்யப்படுவதைத தடுக்குமாறு செல்வாக்குள்ள பௌத்த சமயத் தேரோக்கள் அரசைக் கேட்டுள்ளார்கள்.

அடிப்படைவாத கிறிஸ்தவ மதக் குழுக்கள், வெளிநாட்டு நிதி உதவியுடன் கிராமப்பகுதிகளில் உள்ள ஏழைகளுக்கு உணவு, உடை மற்றும் மருந்து வகைகளைக் கொடுத்து மத மாற்றம்செய்வதில் ஈடுபட்டிருப்பதாகப் பௌத்த சமயத் தலைவர்கள் குற்றம்சாட்டியுள்ளார்கள்.

# உயிர், உடமை இழப்பு கணக்கிடுவதில் சிரமம்

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

பூநகரி இராணுவ-கடற்படை கூட்டுத்தளம் மீதான புலிகளின் தாக்குதலில் ஏற்பட்ட உயிர் உடமை இழப்புகளை கணக்கிடுவது மிக சிரமமான காரியமாகவே இருக்கும் என இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத் தாக்குதலின்போது புலிகள் பல முக்கிய ஆவணங்களை அழித்து விட்டதாலும் இவ் ஆவணங்களுக்குப் பொறுப்பாகவிருந்த அதிகாரிகள் கொல்லப்பட்டு அல்லது காணாமல் போய் விட்டதாலும் சரியான தொகையைப் பெறுவது முடியாத காரியமாக உள்ளது எனவும் அவர்மேலும் தெரிவித்தார்.

தாக்குதல் நடைபெற்றசமயம் அங்கிருந்த பொறுப்பானவர்கள் இல்லாத இந்நிலையில் சரியான முழுமையான இழப்பை கணக்கிடுவது ஒரு போதும் சாத்தியமாகாது என அவர் கூறியுள்ளார்.

---

வடமராட்சி

யாக வல்வெட்டித் துறை அரசினர் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக எடுத்துச்செல்லப்பட்டார்.

அதனையடுத்து தொண்டமனாறு பகுதிக்கு விரைந்த குண்டுவீச்சு விமானங்களும், விசைப்படகுகளும் மாறிமாறி தாக்குதலை மேற்கொண்டதில் பெரிய கடற்கரைப்பகுதியில் நான்கு வீடுகள் முற்றாகச் சேதமானது.

பின்னர் காங்கேசன்துறையிலிருந்து வெற்றிலைக்கேணி நோக்கி வந்துகொண்டிருந்த மூன்று விசைப்படகுகள் பொலிகண்டி இன்பருட்டியில் தாக்குதலை மேற்கொண்டதில் இரண்டு வீடுகளும் ஒரு ஆலயமும் சிறு சேதத்திற்குள்ளானது.

இத் தாக்குதலின்போது மூன்று விசைப்படகுகள், உலங்குவானூர்தி ஒன்று, அவ்ரோ விமானம் ஒன்று, இரண்டு பொம்மர்கள், புக்காரா விமானம் ஒன்றும் கூட்டாக இணைந்து செயற்பட்டன. (யோ)

# பூநகரியில் மிதிவெடி

(யாழ்ப்பாணம்)

பூநகரி சிறிலங்கா இராணுவ முகாம் பகுதியைப் பார்வையிடச் சென்ற இளைஞர் ஒருவர் மிதிவெடியில் சிக்கி காலில் பலத்த காயமடைந்துள்ளார்.

ர. கிருஸ்ணன் (வயது 26) என்ற இளைஞனே இவ்வாறு பலத்த காயமடைந்துள்ளார்.

சிந்தனைக்கு

தன் பொய்மை, பாசாங்கு சிறுமை, செருக்கு ஆகியவற்றினால் உலகம் கறைபடியாமல் விட்டுச் செல்பவனே மேலான கனவனாக இருப்பான்

மார்க்கஸ் அரேலியஸா

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-11-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாக பீடம் 2823
த. பெ. எண் - 05

## டி பியின் அறிவிப்பு கூறுவது என்ன?

பூநகரியில் காயமடைந்த இராணுவத்தினராலும் கடற்படையினராலும் கொழும்பிலுள்ள ஆஸ்பத்திரிகள் நிரம்பி வழிகின்றன. படையினருக்குச் சிகிச்சை அளிக்கவென டாக்டர்களை உடன் பணிக்குத் திரும்புமாறு அரசாங்கம் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளது. தேவை ஏற்படின் வெளிநாட்டு டாக்டர்களை அழைத்து சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை, காயமடைந்த படையினரைப் பார்வையிடவும், கொல்லப்பட்ட படையினரைப் பற்றிய விபரம் அறியப் பெற்றோர்களும், உறவினர்களும் ஆஸ்பத்திரிகளுக்கும், இராணுவ முகாம்களுக்கும் படையெடுத்துள்ளனர். இதன் காரணமாக பொதுவான ஒரு பதற்ற நிலை உருவாகியுள்ளது. அத்தோடு, அரசாங்கத்தின் மீது ஆத்திரமும், வெறுப்பும் ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் மீது கோபமும் குரோதமும் வளர்ந்து வருகின்றன.

சிங்கள மக்களுக்கு அரசாங்கம் மீது இவ் ஆத்திரமும், வெறுப்பும் ஏற்படுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஏனெனில்விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில்வெற்றி என்பது மிகவும் இலகுவானதொன்று என்றே இராணுவ அதிகாரிகளினாலும், அரசியல்வாதிகளினாலும் சித்திரித்துக் காட்டப்பட்டுவந்துள்ளன. கவர்ச்சிகரமான சம்பளமும், சலுகைகளும் அறிவிக்கப்பட்டு இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டும்பணி இடம்பெற்றது.

ஆனால், போரின் கொடூரம் எத்தகையதென்பது இப்பொழுதுதான் சிங்கள மக்களுக்கு நேரடியாகப் புரியத்தொடங்கியுள்ளது. மண்கிண்டிமலையிலும், ஒப்பரேசன் யாழ்தேவியிலும் இராணுவம் பலத்ததோல்வியைச் சந்தித்த போதிலும் அரசாங்கமும், இராணுவத் தலைமையும் அதை ஓரளவு சரிக்கட்டிக் கொண்டன. ஆனால், பூநகரியில் 2000 படையினரைக் கொண்ட ஒரு இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தமையும், பெரும் அளவில் இராணுவத்தினருக்கு விளை

## தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை கிழக்கிலில்லை

### – ஜோசப் பரராஜசிங்கம்

(லண்டன்)

கிழக்கில் பெப்ரவரியில் தேர்தல் நடத்தக் கூடிய சாத்தியமில்லை. மட்டக்களப்பில் 12 பிரதேச சபைகள் உண்டு 7 பிரதேச சபைகளில் தேர்தல் நடத்தக் கூடிய சூழ்நிலை இல்லை. இவ்வாறு மட்டக்களப்பு எம். பி. ஜோசப் பரராஜசிங்கம் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கேள்வி. தேர்தலை கிழக்கில் நடத்த அரசு ஏன் தீவிரமாக உள்ளது?

பதில்: உலக நாடுகளுக்கு கிழக்கை தாம் முழுமையாக கைப்பற்றி விட்டோம் என்ற இராணுவ கூற்றை காட்டவும் அரசியல் ரீதியில் அங்கு தேர்தலை நடத்தின் ஒரு பகுதியிலாவது அமைதி நிலவுகிறது என்ற சூழ்நிலையை வெளிநாட்டுக்கு காட்டும் தோற்றமே இது

கேள்வி: தேர்தல் நடந்தால் வன்முறை ஏற்படுமா?

பதில்: நான் மட்டுமல்ல அப்பகுதி இராஜாங்க அமைச்சர்கள்கூட இங்கு தர்தல் நடத்தினால் வன்முறை ஏற்படும் என எடுத்துக்கூறியுள்ளோம்.

கேள்வி: பூநகரி தாக்குதல் நடந்துள்ளது இதற்கு பின்னரும் அரசு இத்தேர்தலை நடத்தும் என நம்புகிறீர்களா?

பதில்: அரசியல் ரீதியில் உற்று நோக்கும் போது பூநகரி தாக்குதலின் பின் இலங்கை அரசியலிலும் அரசின் தமிழர் பிரச்சினை கண்ணோட்டத்திலும் தாக்கம் ஏற்படலாம் என்பது என் கருத்து அப்படியான நிலையில் தேர்தலை அரசு உடன் நடத்துமா என்பது சந்தேகம். ஏனெனில் அரசு அரசியல் ரீதியான தீர்வை எதிர் நோக்காது இராணுவ தீர்வை நாடும் போக்கே அவர்களின் யாழ்தேவி இராணுவ நடவடிக்கை இலங்கையில் இனப் பிரச்சினை இல்லை எனவும் பயங்கரவாத பிரச்சினையே உள்ளது எனவும் ஜனாதிபதி கூறுவது இராணுவத்திற்கு உந்து சக்தியாக இருந்தது இதனால் இராணுவம் யாழ்தேவி நடவடிக்கையை மேற்கொண்டது இந்த யாழ்தேவி நடவடிக்கையின் தோல்வியும், தொடர்ந்து பூநகரி பெரு நஷ்டமும் சிலவேளை இலங்கை அரசியலிலும், தமிழர் பிரச்சினை தொடர்பாக அரசு எடுக்கும் முடிவில் சில மாற்றங்கள் ஏற்படலாம் என நான் மட்டுமல்ல பல அரசியல் வாதிகள் கூறுகின்றனர்.

கேள்வி. இப்போரிற்கு முடிவில்லையா?

பதில்: இப்போர் காரணமாக இருதரப்பிலும் மனித உயிர் அழிகிறது. இதை முடிவுக்கு அரசு கொண்டு வர வேண்டும். போரினால் பல லட்சமானோர் அகதிகளாக வாழ்கின்றனர். பொருளாதார நட்டம் ஏற்பட்டுள்ளது எனவே அரசு இனியாதல் தாமதமின்றி போரை முடிவுக்கு கொண்டுவந்து போரில் சம்பந்தப்பட்ட இரு தரப்பும் பேசி ஒரு நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

## இடிபாடுகளை அகற்றுவதில் செயலக ஊழியர் ஈடுபாடு

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப்படை விமானங்களின் குண்டுவீச்சு தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளை அகற்றும் பணியில் செயலக ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்

சுப்பர் சொனிக் குண்டுவீச்சு விமானம் நடாத்திய தாக்குதலில் மேற்படி கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளானதுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் உட்பட பலர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இச்சம்பவத்தை தொடர்ந்து செயலகத்தில் இருந்த பல முக்கிய ஆவணங்களை இடிபாடுகளுக்குள் இருந்து மீட்டெடுத்து பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வதிலும் சிறிது சேதத்திற்குள்ளான கட்டடத்தொகுதிகளை சீர்செய்வதிலும் ... மையாற்றும் இச்செயலகத்தில் முக்கிய ஆவணங்களை மீட்டெடுக்கும் பணியில் பத்திற்குட்பட்ட ஊழியர்கள் மட்டுமே ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது [ச] [சி]

### கிராமசேவை அலுவலர் அலுவலகம் சேதமடைந்தது

தீபாவளி தினத்தன்று மண்டை தீவு இராணுவத்தினர் ஏவிய எறிகணைக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள வேலணை கிழக்கு மத்தி கிராம சேவகரின் அலுவலகம் சேதமடைந்ததுடன் ஆவணங்களும் சேதமடைந்தன.

மேற்படி சம்பவம் தீபாவளி தினத்தன்று இரவு 9-30 மணியளவில் நடந்தது இவ் எறிகணை கட்டடத்தை துளைத்துக்கொண்டு சென்று வெடித்தது. இதேவேளை எறிகணை

# அர்த்தமற்ற குண்டுவீச்சுகள் வெகுஜன அமைப்பு சாடல்

(யாழ்ப்பாணம்)

கண்மூடித்தனமான முறையில் சிறிலங்கா படையினர் மேற்கொள்ளும் விமானக் குண்டுவீச்சுக்கள் மற்றும் எறிகணை வீச்சுக்கள் தொடர்பாக வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது

இது தொடர்பாக இவ் ஒன்றியம் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கவிற்கு யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் மூலமாக அனுப்பி வைத்துள்ள ஒரு மகஜரில் மேலும் தெரிவித்திருப்பதாவது; கடந்த வெள்ளியன்று காலையில் யாழ். மாவட்ட செயலகம் மீது விமானக் குண்டுவீச்சு நடத்தப்பட்டதால் அலுவலக தளபாடங்கள், ஆவணங்கள், மற்றும் கோவைகள் சேதமாக்கப்பட்டதுடன் அரசாங்க அதிபர் உட்பட சுமார் 25க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

மறுநாள் காலையில் 135 ஆண்டு காலப் பழமை வாய்ந்த புனித யாகப்பர் ஆலயம் மீது விமானப்படை குண்டுவீசியதில் பதினொரு பேர் கொல்லப்பட்டதுடன், 25க்கும் அதிகமான அப்பாவிப் பொதுமக்கள் காயமடைந்தனர். அதேதினம் பிற்பகலில் நடத்தப்பட்ட குண்டுவீச்சில் பாதுகாப்பு வலயம் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட யாழ் போதனா வைத்தியசாலைப் பகுதியில் நடத்தப்பட்ட குண்டுவீச்சில் வைத்தியசாலை கட்டடம் பெரும் பாதிப்புகளுக்கு இலக்கானதோடு உள்ளிருந்தவர்களும் காயமடைந்தனர். அத்துடன் நந்தாவில் கோவில் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலில் பத்துக்கும் அதிகமானபொதுமக்கள் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுமக்கள் அச்சத்துடனும், பீதியுடனும்தான் வாழவேண்டியுள்ளது கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களால் பாடசாலைகள் மற்றும் பொதுநிறுவனங்கள் தமது வழமையான செயற்பாடுகளில் ஈடுபட முடியவில்லை.

இவற்றின் மூலம் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதில் ஆர்வம் காட்டவில்லை என்பதும் அப்பாவிப் பொதுமக்களை அழித்தொழிப்பதிலேயே நாட்டம் கொண்டுள்ளது என்பதும் மேலும் தெளிவாகின்றது.

எனவேதான் யாழ்ப்பாண மக்களின் மீது கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களையும், எறிகணை வீச்சுக்களையும் நிறுத்தும்படி பாதுகாப்பு படையினருக்கு உத்தரவிடுமாறு உங்களிடம் வேண்டுகின்றோம். அத்துடன் தொண்டர் நிறுவனங்கள் தமது மருத்துவ நிவாரண உதவிகளை மேற்கொளவதற்கு வசதி அளிக்கும் முகமாகவும், உணவு விநியோகத்தைச் சீராக்கும் முகமாகவும் ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தும்படியும் வேண்டுகின்றோம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மரக்கறிகள் விலை உயர்வு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம், சங்கானை, திருநெல்வேலி, சுன்னாகம், சாவகச்சேரி, கல்வியங்காடு ஆகிய சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிக கூடுதல் விலைக்கு விற்கப்பட்டு வருகிறது.

பச்சைமிளகாய் கிலோ 80 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரையும், பாவற்காய் 45 ரூபா தொடக்கம் 53 ரூபா வரையும், பயிற்றங்காய் 40 ரூபா தொடக்கம் 45 ரூபாவாகவும் விற்பனையாகி வருகிறது.

வாழைப்பழம் கிலோ 15 ரூபா தொடக்கம் 20 ரூபா வரையும் விற்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது வெற்றிலை சில இடங்களில் ஒன்று 1 ரூபா 50 சதமாகவும் விற்பனையாகிறது. (24)

### பாலர்பாடசாலை திறந்து வைப்பு

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை துணைவி கலைவாணி சனசமூக நிலை...

## எந்த முறையைக் கையாண்டாவது யுத்தத்தை முடிக்க வேண்டும்

### – ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க

(கொழும்பு)

அடுத்த வருட இறுதியில் பொதுத் தேர்தல் நடைபெறும். தேர்தலில் நின்று பிடிக்கக் கூடிய விதத்தில் அபிவிருத்தி வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் இவ்வாறு அண்மையில் கேகாலையில் மகளிர் கல்லூரி பொன்விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்தார்.

அவர் அங்கு உரைநிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது; எமது வாக்காளர்கள் நேர்மையானவர்கள். அதனால்தான் புன்முறுவலுடன் அவர்களை வணங்குகின்றோம்.

வருடாந்தம் வடக்கு கிழக்கு யுத்தத்திற்காக 2500 கோடி ரூபாவை செலவிட்டு வருகின்றோம். இந்த யுத்தத்திற்கு முடிவு கட்ட வேண்டும். எந்த முறையைக் கையாண்டாவது இந்த யுத்தத்தை நாங்கள் முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் இந்த 2500கோடி ரூபா பணத்தினால்தான் பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், ஜீப் வண்டிகள் மற்றும் வாகனங்கள் வாங்க வேண்டியிருக்கிறது எனவும் தெரிவித்தார்.

## பலியான ஊழியர் உழைப்பில் தங்கியிருந்தோருக்கு சம்பளம்

(கொழும்பு)

பலியான ஊழியரின் உழைப்பில் தங்கியிருந்தவர்களுக்கு இறந்தவரின் சம்பளமும், ஓய்வூதியமும் வழங்குவதற்கான சுற்றுநிருபம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த மாகாணத்திலுள்ள சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

... அல்லது காணாமற் போன உத்தியோகத்தரில் தங்கியிருப்போர் அல்லது பின்னுரித்தாளிகள் இந்த உத்தியோகத்தர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தை பெறுவதற்கு உரித்துடையவராவார்.

இக்கொடுப்பனவுகள் அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்திருப்பின் 55 வயது

மீது ஆத்திரமும், வெறுப்பும் ஏற்பட்டுள்ளன. தமிழ் மக்கள் மீது கோபமும் குரோதமும் வளர்ந்து வருகின்றன.

சிங்கள மக்களுக்கு அரசாங்கம் மீது இவ் ஆத்திரமும், வெறுப்பும் ஏற்படுவதில் தவறு ஒன்றும் இல்லை. ஏனெனில்விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில்வெற்றி என்பது மிகவும் இலகுவானதொன்று என்றே இராணுவ அதிகாரிகளினாலும், அரசியல்வாதிகளினாலும் சித்திரித்துக் காட்டப்பட்டுவந்துள்ளன. கவர்ச்சிகரமான சம்பளமும், சலுகைகளும் அறிவிக்கப்பட்டு இராணுவத்திற்கு ஆட்கள் திரட்டும்பணி இடம்பெற்றது.

ஆனால், போரின் கொடூரம் எத்தகையதென்பது இப்பொழுதுதான் சிங்கள மக்களுக்கு நேரடியாகப் புரியத்தொடங்கியுள்ளது. மண்கிண்டிமலையிலும், ஒப்பரேசன் யாழ்தேவியிலும் இராணுவம் பலத்ததோல்வியைச் சந்தித்த போதிலும் அரசாங்கமும், இராணுவத் தலைமையும் அதை ஓரளவு சரிக்கட்டிக் கொண்டன. ஆனால், பூநகரியில் 2000 படையினரைக் கொண்ட ஒரு இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்தமையும், பெரும் அளவில் இராணுவத்தினருக்கு விளைவித்த சேதமும் அரசால் முடிமறைக்கக்கூடியதாகவோ, சமாளித்துக்கொள்ளக் கூடியதொன்றாகவோ இல்லை.

இந்நிலையில்தான் அரசாங்கம் சிங்கள மக்களை அமைதி காக்குமாறும், காயமடைந்த படையினருக்கு உதவும் பணியில் ஈடுபடுமாறும் கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க விடுத்துள்ள இக்கோரிக்கையானது உண்மையில், சிங்கள மக்களை அமைதி காக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையா? அல்லது தமிழருக்கு எதிரான கலவரத்திற்கான சந்தர்ப்பம் ஒன்று உருவாகியுள்ளது என்ற அறிவித்தலா? என்பதில் சந்தேகமே உள்ளது.

ஏனெனில், கடந்த காலத்தில் இலங்கையில் இடம்பெற்ற இன வன்முறைகள் யாவற்றிற்கும் அரசாங்கங்களும், ஆட்சித் தலைவர்களுமே காரணமாக இருந்தார்கள். பொதுவாக அவர்களே இனக்கலவரத்தை நடத்தினார்கள். அரசாங்கங்கள்தம்மீதுமக்களுக்கிருந்தவெறுப்பை போக்கவும், அரசின் மீதான மக்களின் ஆத்திரத்தை திசை திருப்பவும், பேரினவாதத்திற்கான தமது தலைமைத்துவப் பண்பை நிரூபிக்கவும் நிலைநாட்டவும் இவ் இனக்கலவரங்கள் கட்டவிழ்த்துவிட்டன என்பதே உண்மை.

இந்த வகையில், இன்றும் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசிற்கெதிரான சிங்கள மக்களின் வெறுப்பையும் இந்த வகையில் சரிசெய்வதென அரசாங்கம் முடிவு செய்து விட்டது என்பதே இவ் அறிவிப்பின் வெளிப்பாடாகும். அதாவது, அரசிற்கு எதிராகச் சிங்கள மக்களின் ஆத்திரம் அதிகரித்துச் செல்லுமானால் அதனை தமிழ் மக்களுக்கு எதிராகத் திருப்பி விடுதல் பற்றி அரசாங்கம் முடிவு செய்து விட்டது என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆனால், கடந்தகாலங்களில் சிங்கள அரசுகள் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்திய இனக்கலவரங்களின் விளைவுகளே, இன்றைய அரசியல் இராணுவ சூழ்நிலைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் காரணமாகும். அதிலும் குறிப்பாக, 1977 ஆம் ஆண்டிலும், 1983 ஆம் ஆண்டிலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் நடத்திய இனக்கலவரங்களே இலங்கையில் இன்றும் பெருமளவு இரத்தம் சிந்தப் படுவதற்கான நிலையை உருவாக்கியது.

ஆனால், இனிமேலும் சிங்கள அரசாங்கங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக இன வன்முறையை கட்டவிழ்த்து விட்டால் அதன் விளைவுகள் கடந்த காலத்தைப் போன்று இருக்கப் போவதில்லை. அவை இலங்கை அரசியலை வேறு பரிணாமத்திற்கே இட்டுச் செல்லும் என்பதே நிதர்சனம்.

---

(நமது நிருபர்)

சிறிலங்கா விமானப் படை விமானங்களின் குண்டுவீச்சு தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த கட்டடங்களின் இடிபாடுகளை அகற்றும் பணியில் செயலக ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர்

சுப்டர் சொனிக் குண்டுவீச்சு விமானம் நடாத்திய தாக்குதலில் மேற்படி கட்டடம் பலத்த சேதத்திற்குள்ளானதுடன் யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் உட்பட பலர் காயமடைந்ததும் தெரிந்ததே.

இச்சம்பவத்தை தொடர்ந்து செயலகத்தில் இருந்த பல முக்கிய ஆவணங்களை இடிபாடுகளுக்குள் இருந்து மீட்டெடுத்து பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்வதிலும் சிறிது சேதத்திற்குள்ளான கட்டடத்தொகுதிகளை சீர்செய்து சில முக்கிய பகுதிகளை இயங்கச் செய்யும் முயற்சியிலும் இவ் ஊழியர்கள் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை 300 பேர் வரையிலான ஊழியர்கள் கடமையாற்றும் இச்செயலகத்தில் முக்கிய ஆவணங்களை மீட்டெடுக்கும் பணியில் பத்திற்குட்பட்ட ஊழியர்கள் மட்டுமே ஈடுபட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது [ச] [சி]

---

## கிராமசேவை அலுவலர் அலுவலகம் சேதமடைந்தது

தீபாவளி தினத்தன்று மண்டை தீவு இராணுவத்தினர் ஏவிய எறிகணைக்கு மணிக்கூட்டு வீதியில் உள்ள வேலணை கிழக்கு மத்தி கிராம சேவகரின் அலுவலகம் சேதமடைந்ததுடன் ஆவணங்களும் சேதமடைந்தன.

மேற்படி சம்பவம் தீபாவளி தினத்தன்று இரவு 9-30 மணியளவில் நடந்தது இவ் எறிகணை கட்டடத்தை துளைத்துக்கொண்டு சென்று வெடித்தது இதேவேளை எறிகணை துளைத்த இடத்திற்கு அருகில் உறங்கிக்கொண்டிருந்த கிராம சேவகரின் தாயார் சிறு காயங்களுடன் மயிரிழையில் உயிர் தப்பியுள்ளார். (சி)

---

ஆகிய சந்தைகளில் மரக்கறி வகைகளின் விலைகள் நாளுக்கு நாள் அதிக கூடுதல் விலைக்கு விற்கப்பட்டு வருகிறது.

பச்சைமிளகாய் கிலோ 80 ரூபாவாகவும், கத்தரிக்காய் கிலோ 60 ரூபா தொடக்கம் 80 ரூபா வரையும், பாவற்காய் 45 ரூபா தொடக்கம் 53 ரூபா வரையும், பயிற்றங்காய் 40 ரூபா தொடக்கம் 45 ரூபாவாகவும் விற்பனையாகி வருகிறது.

வாழைப்பழம் கிலோ 15 ரூபா தொடக்கம் 20 ரூபா வரையும் விற்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது வெற்றிலை சில இடங்களில் ஒன்று 1 ரூபா 50 சதமாகவும் விற்பனையாகிறது. (24)

## பாலர்பாடசாலை திறந்து வைப்பு

(கொழும்புத்துறை)

வட்டுக்கோட்டை துணைவி கலைவாணி சனசமூக நிலையத்தினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் புதிய பாலர் பாடசாலை ஒன்றை அண்மையில் மங்கள விளக்கேற்றி திறந்து வைத்தனர். (24)

---

மகளிர் கல்லூரி பொன்விழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்திய சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க தெரிவித்தார்.

அவர் அங்கு உரைநிகழ்த்துகையில் மேலும் கூறியதாவது; எமது வாக்காளர்கள் நேர்மையானவர்கள். அதனால்தான் இந்த யுத்தத்தை நாங்கள் முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் இந்த 2500கோடி ரூபா பணத்தினால்தான் பீரங்கிகள், துப்பாக்கிகள், வெடிகுண்டுகள், ஜீப் வண்டிகள் மற்றும் வாகனங்கள் வாங்க வேண்டியிருக்கிறது எனவும் தெரிவித்தார்.

## பலியான ஊழியர் உழைப்பில் தங்கியிருந்தோருக்கு சம்பளம்

(கொழும்பு)

பலியான ஊழியரின் உழைப்பில் தங்கியிருந்தவர்களுக்கு இறந்தவரின் சம்பளமும், ஒய்வூதியமும் வழங்குவதற்கான சுற்றுநிருபம் ஒன்றை வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த மாகாணத்திலுள்ள சகல கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

இச்சுற்றுநிருபத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது. பொது நிர்வாக அமைச்சின் 13 - 07 - 1988ஆம் திகதிய 21/88ம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் உயிரிழந்த அல்லது காணாமற் போன உத்தியோகத்தரில் தங்கியிருப்போர் அல்லது பின்னுரித்தாளிகள் இந்த உத்தியோகத்தர் கடைசியாகப் பெற்ற சம்பளத்தை பெறுவதற்கு உரித்துடையவராவார்.

இக்கொடுப்பனவுகள் அந்த உத்தியோகத்தர்கள் சேவையில் இருந்திருப்பின் 55 வயது அடையும காலம்வரை தொடர்ந்து வழங்கப்படும். இதன் பின்னர் தகுதியானோருக்கு இவ்ஊதியம் தொடர்ந்து வழங்கப்படல் வேண்டும்.

---

# ஹஸ்ரத்பால் முற்றுகை முடிவு தீவிரவாதிகள் சரணடைந்தனர்!

(டில்லி)

ஹஸ்ரத்பால், தர்காவினுள் தஞ்சம் புகுந்திருந்த தீவிரவாதிகள் ஆயுதங்களைக் கைவிட்டு இராணுவத்திடம் சரணடைந்தனர். இதனைத் தொடர்ந்து முப்பத்தொரு நாள் நீடித்த இராணுவ முற்றுகை அமைதியாக முடிவடைந்துள்ளது. ஆயுதங்களைக் கைவிட்டு நேற்று அதிகாலை 2.25 மணியளவில் மசூதியிலிருந்து வெளியேறத் தொடங்கிய தீவிரவாதிகள் 5.00 மணியளவில் முற்றாக வெளியேறினர். இவ்வாறாக 55 பேர் வெளியேறியதை தொடர்ந்து மசூதியினுட் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்து பெருமளவு நவீன ரக ஆயுதங்கள், வெடிமருந்துகள், ரவைகள் போன்றவற்றைக் கைப்பற்றினர்.

இதேவேளை ஹஸ்ரத்பால் புனித தலமும். அதனுள் நபிகளின் புனித சின்னங்களும் பாதுகாப்பாக இருப்பதாக இராணுவத்தினருடன் சென்று பார்வையிட்ட முஸ்லிம் தலைவர்கள் கூறியுள்ளனர்.

அமைதியான முறையில் தீவிரவாதிகள் ஹஸ்ரத்பால் தர்காவிலிருந்து வெளியேறியதைத் தொடர்ந்து அவர்கள் அனைவரும் சட்ட விசாரணைகளுக்காகவும் இனங்காணப்படுவதற்காகவும் ஜம்மு காஷ்மீர் மாநிலப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

---

## குன்னூரில் நிலச்சரிவால் பெரும்பாதிப்புகள் ஏற்பட்டது

(சென்னை)

தமிழ்நாட்டின் உதகமண்டலத்தில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் நீலகிரி மாவட்டத்தின் குன்னூர் பகுதியில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டு உள்ளன. பலத்த உயிர்ச்சேதங்களும், பொருட் சேதங்களும் ஏற்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகிறது இந்த நிலச்சரிவினால் வீதிகள் பாதிக்கப்பட்டுள்ளதால் போக்குவரத்திற்கு தடை ஏற்பட்டிருப்பதாகவும், தகவல் தொடர்புகள் சீர் குலைந்திருப்பதாகவும் மேலும் தெரியவருகின்றது. மீட்புப் பணிகளில் மாநிலக் காவல் துறையினருடன் இராணுவத்தினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் விமானப் படையின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை நிலச் சரிவினால் பாதிக்கப்பட்ட வீதிகளை போர்க்கால அடிப்படையில் திருத்துமாறு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். அத்துடன் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவும் இந்த அனர்த்தத்தால் ஏற்பட்ட பாதிப்பு குறித்து தமது ஆழ்ந்த அனுதாபத்தை வெளியிட்டுள்ளார்.

நிலச் சரிவு ஏற்பட்ட பகுதிகளிலிருந்து இதுவரை எட்டுப்பேர் பலியானதாகவும் பொலிஸ் நாய்களின் உதவியுடன் காயமடைந்தவர்களையும் சடலங்களையும் தேடும் பணி தொடர்வதாகவும் மாநில அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

## இஸ்ரேலின் இராணுவமேலாதிக்கம் பேணப்படும்

மேற்காசியாவில் இஸ்ரேலின் இராணுவ மேலாதிக்கத்தை அமெரிக்கா தொடர்ந்தும் பேணும் என்று அதிபர் பில் கிளிண்டன் உறுதி அளித்திருப்பதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை கூறியுள்ளது.

இஸ்ரேலுக்கு இருபது எப்-15 ரகபோர் விமானங்களை விற்பனை செய்ய அமெரிக்கா இணங்கியிருப்பது தெரிந்ததே.

---

## பிரிட்டன்-இந்திய உறவு மேலும் வலுவடையும்

### - பிரிட்டன் வெளியுறவு அமைச்சர்

[டில்லி]

குற்றம் சாட்டப்பட்டவர்களை விசாரணைக்காக நாடு கடத்தி அந்தந்த நாடுகளிடமே ஒப்படைப்பதற்கு வகை செய்யும் விதத்தில் இந்தியாவுக்கும் பிரிட்டனுக்கும் இடையே செய்து கொள்ளப்பட்டிருக்கும் உடன்பாடு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் மிக முக்கியமானதொரு மைல்கல் ஆகும். இவ்வாறு புதுடில்லி வந்துள்ள பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் கூறியுள்ளார்.

இந்த உடன்பாடு தொடர்பான ஆவணங்கள் நேற்று புதுடில்லியில் உத்தியோக பூர்வமாக கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கான ஆவணங்களை பிரிட்டன் வெளியுறவு அமைச்சரும், இந்திய வெளியுறவு அமைச்சரும் நேற்று உத்தியோக பூர்வமாக பரிமாறிக் கொண்டனர்.

## முற்றுகை முடிவடைந்ததால் மனநிம்மதி ஏற்பட்டுள்ளன

### -பி. வி. நரசிம்ம ராவ்

[டில்லி]

இந்திய இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்ட ஹஸ்ரத்பால் தர்காவிலிருந்து தீவிரவாதிகள் அமைதியாக வெளியேறியிருப்பதைத் தொடர்ந்து பிரதமர் பி. வி. நரசிம்மராவ் மனநிம்மதியை வெளியிட்டுள்ளார். மசூதியின் புனிதத்தன்மை பாதுகாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை தீவிரவாதிகள் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவிச் செல்லவிடாமல் தாம் இழைத்த தவறுகளுக்காக சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படுதல் அவசியமாகும் என்று பாரதீய ஜனதாக் கட்சியின் பேச்சாளர் ஜே. பி மாத்தூஸ் கூறியுள்ளார்.

மேலும் பல அரசியல் கட்சித் தலைவர்களும் ஹஸ்ரத்பால் முற்றுகை சுமுகமாகத் தீர்த்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து அபிப்பிராயங்கள் வெளியிட்டுள்ளனர்.

---

## தட்சருக்கு ஏமாற்றமாம்

பொஸ்னியா தொடர்பாக உலகத் தலைவர்கள் பின்பற்றும் கொள்கையினால் நான் ஏமாற்றமடைந்துள்ளேன். அதை விடவும் பொஸ்னிய விவகாரம் தொடர்பாக நான மிகவும் திகிலடைந்துள்ளேன என்று பிரிட்டனின் முன்னாள் பிரதமர் திருமதி மார்க்கிரட் தட்சர் கூறியுள்ளார்.

## வீரஅஞ்சலி

தாயின் மடியில் 28 — 03 — 1974



தாயக மண்ணில் 12 — 11 — 1993

### கப்டன் ஈழவாசன்

(கதிரமலை ஜெயபாலன்)

12-11-93இல் பூநகரியில் சிறிலங்கா இராணுவத்துடன் நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவை எய்திய முரசுமோட்டை, பரந்தனைச் சேர்ந்த ஈழவாசனுக்கு எமது வீரஅஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

85, கோயில்வீதி,
யாழ்ப்பாணம்.
(6605)

சகோதரி: உதயா,
உறவினர்: பாலசுப்பிரமணியம் குடும்பம்.

## கண்ணீர் அஞ்சலிகள்

ஈழமண்ணில் உதயம்
**6. 7. 1969**

ஈழமண்ணிற்காக அஸ்தமனம்
**11. 11. 1993**



### 2-ம் லெப். ஈழப்பிரியா

(மதிவதனி நவரட்ணம்)

பூநகரித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2ஆம் லெப்டினன்ட் ஈழப்பிரியா (மதிவதனி நவரட்ணம் கொழும்புத்துறை மேற்கு) அவர்கட்கும் அத்தாக்குதலில் வீரச்சாவடைந்த அனைத்து வீரவேங்கைகளுக்கும் எங்களது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

புள்ளிக்குயிலென பறந்து திரிந்தவளே
துள்ளும் மான் என ஓடித்திரிந்தவளே
பிறந்த மண்ணை பெற்றவளாய் நேசித்தவளே
பூநகரி மண்ணுக்கு விதையான வீரவேங்கையே
- ஈழப்பிரியா
உன் ஆசை முடித்திட உன்வழி தொடர்ந்திடுவோம்

## வீரச்சாவு



### வீரவேங்கை இனியவன் (உமா)

பாலரட்ணம் உமாச்சந்திரன்
அரியாலை

இவர் பாலரட்ணம் பரமேஸ்வரியின் அன்பு மகன் ஆவார். இவர் பூநகரி முகாம் தகர்ப்பில் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவரது வித்துடல் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் புதை குழியில் விதைக்கப்பட்டது. உற்றார், உறவினர், நண்பர்கள், போராளிகள் அனைவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
40, சாஸ்திரியார் லேன்,
அரியாலை. (6608)
தந்தை, தாய், சகோதரர்கள்.

### லெப். கனியன் [நிசாந்]

(சில்வன் சஜீவன் ஆரோக்கியநாதர்)

(சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்)

பூநகரி முகாம் தாக்குதல் நடவடிக்கையின் போது வீரச்சாவடைந்தார் இவர் திரு ஆரோக்கியநாதர் (சிசிலியன் கல்வி நிலைய உரிமையாளரும்) திருமதி மில்றெட் ஆரோக்கியநாதர் (புனித ஜோண் பொஸ்கோ ஆசிரியை) ஆகியோரின் சிரேட்ட புத்திரனும் நிகால் நிறோஜினி (மாணவி திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை) தீபன் திலீசன் (மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள், யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/5 அச்சுக்கூட ஒழுங்கை
யாழ்ப்பாணம்
தகவல்
திரு. திருமதி ஆரோக்கியநாதர்

(6606)

### நெஞ்சத்தில் நீங்காத 7ஆம் நாள் நினைவு

வீரப்பிறப்பு: 26-12-1971



வீரச்சாவு: 11-11-1993

## கொடுப்பனவு பெறலாம்

(தென்மராட்சி)

கொடிகாமம் தென்மராட்சி கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் கார்த்திகை மாதத்தின் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஓய்வூதியம் எடுப்பவர்கள் சங்க கடமை நேரத்தில் ஓய்வூதியத்தைப் பெறறுக் கொள்ளலாம் என சங்க பொது முகாமையாளர் திரு. எஸ். கணேசலிங்கம் அவர்கள் தெரிவித்துள்ளார். (86)

★

1993 ஆம் ஆண்டில் மாசி, பங்குனி, சித்திரை, ஆனி மாதங்களில் நடைபெற்ற முகாமைத்துவப் பயிற்சிக் கருத்தரங்கில் பங்குபற்றி இதுவரையும் அதற்கான கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளாத அதிபர்கள், பகுதித் தலைவர்கள் எதிர்வரும் 22 11 93 முதல் 30. 11. 93 வரையுள்ள காலப்பகுதிக்குள் முகாமைத்துவ நிலையத்திற்கு வருகைதந்து தங்களதுகொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவிக்கிறார்.

### தொலைக்கல்வி

தொலைக் கல்வி பயிற்சி ஆசிரியருக்கான செய்முறைப் பரீட்சைகளின் தொடர்ச்சி 20ஆம் திகதி சகல தொலைக் கல்வி மத்திய நிலையங்களிலும் நடைபெறும் என பாடநெறி இணைப்பாளர் அறிவிக்கின்றார் மேலும் சிரேஷ்ட போதனாசிரியர்களை புதிய மொடியூல்களை 22ஆம் திகதி காலை 10 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரியில் பெற்றுக் கொள்ளும்படியும் அவர் கேட்டுக் கொள்கின்றார்.

### இடமாற்றப் பட்டியல் அனுப்பப் பட்டது

(நல்லூர்)

பதினான்கு கல்விக் கோட்டங்களிலும் கடமையாற்ற இடமாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய ஆளணியினர் பட்டியல் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களினால் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்பட்டது. இப் புதிய இடமாற்றப் பட்டியல் 15-11-93 தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றது. இப் பட்டியலில் உள்ள பெயர்களில் சம்பள வேலை

## கொழும்பு செல்லவிருக்கும் நோயாளர் கவனத்திற்கு

(குருநகர்)

எதிர்வரும் 20ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற இருந்த நோயாளர் கப்பல் சேவை நடைபெற மாட்டாது என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளதாக யாழ். அரசினர் பொது வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

அன்றைய தினம் பயணம் செய்ய தெரிவான நோயாளர்களும் அவர்களுடன் கூடச் செல்பவர்களும் இச் செய்திக் குறிப்பை கவனிக்கும்படி கேட்கப்படுகின்றனர் (21)

## விண்ணப்ப முடிவு திகதி டிசம்பர் 12வரை நீடிப்பு

பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படுவதற்காக விண்ணப்பிக்க வேண்டிய முடிவு திகதி அடுத்த மாதம் பன்னிரண்டாம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு அறிவித்துள்ளது. இந்த விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 22ஆம் திகதி என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

## உற்பத்தி ஊக்குவிப்பிற்கு தரிசுக்காணி விநியோகம்

வவுனியாக் கோட்டத்திலே தரிசாகக் கிடக்கும் காணிகளை உற்பத்தி முயற்சிகளில் ஈடுபடுத்துவதற்காகடகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளில் வவுனியா கோட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றது

இதன் முன்னோடி நடவடிக்கையாக காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதை ஊககுவிக்கும் நோக்குடன் (நயினாமடு பிரதேசத்தில் உள்ள தரிசுக்காணிகள் கிராமிய உற்பத்திக் குழுக்களால் இனம் காணப்பட்டு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.


## விற்பனைக்குவந்துவிட்டது




தமிழ்த் தாய் வெளியீடான

அஸ்தமனம்

**11. 11. 1993**



## 2-ம் லெப். ஈழப்பிரியா

(மதிவதனி நவரட்ணம்)

பூநகரித் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட 2ஆம் லெப்டினன்ட் ஈழப்பிரியா (மதிவதனி நவரட்ணம் கொழும்புத்துறை மேற்கு) அவர்கட்கும் அத்தாக்குதலில் வீரச்சாவடைந்த அனைத்து வீரவேங்கைகளுக்கும் எங்களது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகிறோம்.

புள்ளிக்குயிலென பறந்து திரிந்தவளே
துள்ளும் மான் என ஓடித்திரிந்தவளே
பிறந்த மண்ணை பெற்றவளாய் நேசித்தவளே
பூநகரி மண்ணுக்கு விதையான வீரவேங்கையே
- ஈழப்பிரியா

உன் ஆசை முடித்திட உன்வழி தொடர்ந்திடுவோம்
சாந்தி ... சாந்தி ... சாந்தி ...

கொழும்புத்துறை மேற்கு
சனசமூக நிலைய மக்கள்

(6601)

---

## 23-வது பிறந்த நாளும் 39-ம் மாத நினைவு நாளும்

வல்வையில்
மலராய்:
17. 11. 1970

கோட்டையில்
விதையாய்:
05. 08. 1990



## 2-ம் லெப். மாதுரி

[இரத்தினசாமி ரஞ்சினிதேவி]

எங்கள் செல்வமே ரஞ்சினி!
நீ பிறந்த நாளின்று - உன்
நினைவலைகள் எம் இதயத்தில்
நீயோ முழுமதியாய் வான்வெளியில்
இனி எப்போ மலர்வாய் தாய் மண்ணில்

எங்கள் வீர மகளே மாதுரி!
சொந்தமண் எரியுண்டு
செந்தணலாகும் நிலைகண்டு
பொங்கு புகழ் செந்தமிழ் தலைவன் வழியில்
வெங்களமாடி வீரமாய் விதையுண்டீரோ!

எங்கள் செல்வ மகளே!
கோட்டையில் விதையாய்
நாட்டிய போதிலும் எங்கள் இதயக்
காட்டினில் என்றும்
வாடாத றோசா நீயம்மா

நின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

''பாஸ்கரானந்தவேல் இல்லம்''
கார்த்திகேசு வீதி,
மதவடி, வல்வை.

அக்கா, மாமா, மாமி
குடும்பத்தினர்.

(6609)

---

ஆகியோரின் சிரேட்ட புத்திரனும் நிகால் நிறோஜினி (மாணவி திருக்குடும்பக் கன்னியர் மடம் ஆங்கிலப் பாடசாலை) தீபன் திலீசன் (மாணவன் புனித பத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சக போராளிகள், யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

5/5 அச்சுக்கூட ஒழுங்கை
யாழ்ப்பாணம்

தகவல்
திரு. திருமதி ஆரோக்கியநாதர்

(6606)

---

## நெஞ்சத்தில் நீங்காத 7ஆம் நாள் நினைவு

வீரப்பிறப்பு:
26-12-1971



வீரச்சாவு:
11-11-1993

## கப்டன் இராவணன் (கோணேஸ்) மரியதாஸ் - ஜேசுதாஸன்

நாரந்தனை தெற்கு, ஊர்காவற்றுறை
"தீவகம்"

பூநகரி இராணுவ முகாம் தகர்ப்பில் வீரகாவியம் படைத்த கப்டன் இராவணன் (கோணேஸ்) அவர்களுக்கும் அவரோடு வீரச்சாவு அடைந்த ஏனைய மாவீரர்களுக்கும் எமது இதயபூர்வமான கண்ணீர் அஞ்சலிகள்.

வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இவரது 7ஆம் நாள் நினைவுநாள் எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் சக போராளிகளையும், உறவினரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மணியரசன் வீடமைப்புத்திட்டம்,
பூம்புகார் வீதி,
அரியாலை. 'தீவகம்'

தகவல்:
ச. ஞானசீலி
சகோதரி.

(6610)

---

## மரண அறிவித்தல்

## திரு. கந்தப்பர் முருகேசு

[இளைப்பாறிய பொலிஸ் உத்தியோகத்தர்]

வதிரியைச் சேர்ந்த திரு. க. முருகேசு அவர்கள் 15-11-1993 அன்று இறையடி சேர்ந்துள்ளார். அன்னார் நாகம்மாவின் அன்புக்கணவரும் மாணிக்கவாசகர் (ஓமான்) காலம்சென்ற யோகமலர், உதயநாகேஸ்வரி, அனந்தேஸ்வரன் (அதிபர் கம்பர்மலை அ த க பாடசாலை) மதனமோகன் (ஓமான்) காலஞ்சென்ற மண்டலேஸ்வரன், முரளிதரன் (ஆசிரியர் புலோலி மெ.மி த க. பாடசாலை) கௌரிசங்கர் (ஓமான்) ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேந்திரராசா (பிரதேச செயலகம் கரவெட்டி) சிவஞானம் (ஞானி) தங்கராணி (ஓமான்) நாகலட்சுமிதேவி (ஆசிரியை அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்) ஜெயலஷ்மி (ஓமான்) யசோதா (ஆசிரியை நீர்கொழும்பு தோப்பு அ. த க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், இராஜமுகுந்தன், வைகுந்ததீபன், ஜெயமயூரன், மேனகா, ஜானகா, டினேஸ். சிவசங்கர், ஷாலினி, உதயசங்கர், தனுஷ்கா, பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் தகனக்கிரியை ஆலங்கட்டை மயானத்தில் 15-11-1993 அன்று நடைபெற்றது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு. அனந்தேஸ்வரன் (மகன்)

[5861]

---

டுக் கொள்கின்றார்.

## இடமாற்றப் பட்டியல் அனுப்பப் பட்டது

(நல்லூர்)

பதினான்கு கல்விக் கோட்டங்களிலும் கடமையாற்ற இடமாற்றம் செய்யப்பட்டுள்ள புதிய ஆளணியினர் பட்டியல் யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் அவர்களினால் ஒவ்வொரு உத்தியோகத்தர்களுக்கும் நேற்றைய தினம் அனுப்பி வைக்கப்பட்டது. இப்புதிய இடமாற்றப் பட்டியல் 15-11-93 தொடக்கம் நடைமுறைக்கு வருகின்றது. இப்பட்டியலில் உள்ள பெயர்களில் சம்பள வேலைகளையும், கணக்குப் பதிவு வேலைகளையும் செய்யும் உத்தியோகத்தர்களைத் தவிர்ந்த மற்றைய உத்தியோகத்தர்கள் கடந்த 15-11-93 தொடக்கம் தமது புதிய கல்விக் கோட்டங்களுக்கு செலல வேண்டும். ஏனையவர்கள் 01-02-94 தொடக்கம் தமது புதிய இடங்களுக்குச் செல்லலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(17)

---



தமிழ்த் தாய் வெளியீடான


## புதுவை இரத்தினதுரையின் "நினைவழியா நாட்கள்"

யாழ். நகர் தமிழ்த்தாய் புத்தகசாலையிலும் மற்றும் - எல்லா இடங்களிலும் கிடைக்கும்.

(சி-7947)

---


## வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்!



# UNIKCO COMPUTER CENTRE

- WORD PROCESSING (Word Star Rel 5.5) and MS - DOS
- dBASE III PLUS and MS DOS
- LOTUS 1-2-3 and MS-DOS
- BASIC LANGUAGE (Files, Graphics and Sound)
- PASCAL LANGUAGE (Files and Graphics)

- காலை, மாலை வகுப்புகள்
- கூடிய நேர செய்முறைப் பயிற்சி
- தமிழில் விளக்கங்கள்

- Special Classes for Managers, Engineers, Graduates, Accountant, Typist Bankers and Clerks.

ஆரம்பம் :- 19-11-93 [திங்கள், புதன், வெள்ளி]
20-11 93 [சனி, ஞாயிறு]

மேலதிக விபரங்கட்கு:

37, CLOCK TOWER ROAD,
JAFFNA.

(சி-7946)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1993 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.